28.02.2023
O.S.No. 212/2018

பி.வா. சா. 3 சேசுராஜ் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் என்.பஞ்சம்பட்டியில் வசிக்கிறேன். வாதி, பிரதிவாதி இருவரும் அங்குதான் வசிக்கிறார்கள். வாதி மற்றும் பிரதிவாதிகள் குடும்பத்தைப் பற்றி தெரியும். சொத்துக்கள் அனைத்தும் ஆரோக்கியத்துக்குப் பாத்தியப்பட்டது என்றால் அந்த விவரம் தெரியாது. எந்த எந்த சொத்துக்கள் எவ்வளவு சொத்துக்கள் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரமும் தெரியாது. வாதி அவரது தாத்தா கே.ஆரோக்கியத்தின் பூர்வீக சொத்துக்களைப் பொறுத்து பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். கே.ஆரோக்கியம் வெற்றிலை வியாபாரம் செய்துவந்தார் என்றால் தெரியாது. அந்த வியாபாரத்தின் அடிப்படையில் வந்த வருமானத்தைக்கொண்டு சொத்துக்களை அவர் வாங்கினார் என்றால் தெரியாது. கே.ஆரோக்கியத்தின் மக்கள் கே.ஏ.ஆரோக்கியம், கே.ஏ.தருமராஜ் ஆக இரண்டு மக்கள் என்றால் சரிதான். அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து கே.ஆரோக்கியம் 28.03.1971 ல் உயில் எழுதி வைத்தார் என்றால் தெரியாது. அந்த உயிலில் ஏ செடியூல் கே.ஏ.ஆரோக்கியத்துக்கும் பி செடியூல் கே.ஏ.தருமராஜூக்கும் எழுதி வைத்தார் என்றால் தெரியாது. அந்த உயிலில் அவர்களுடைய மக்கள் இருவரும் அனுபவிக்க மட்டுமே பாத்தியம் என்றும் அவர்கள் இறந்த பிறகு ஆண் பேரப் பிள்ளைகளுக்கு பாத்தியம் என்று எழுதி வைத்தார் என்றால் தெரியாது. பிராதில் உள்ள விவரங்கள் தெரியாது. என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரியாது. தருமராஜ் அவரது மகன் ஆரோக்கியத்துக்கு 11.08.1998 ம் தேதி எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பற்றி தெரியாது. தருமராஜ் மற்றும் அவரது மகன் ஆரோக்கியத்தின் மீது மேற்படி செட்டில்மெண்ட் செல்லாது என்று ஓ.எஸ்.252/2002 ல் ஒரு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. மேற்படி வழக்கு 3.3.2003 ல் வாதிக்கு ஆதரவாக தானம் செல்லாது என தீர்ப்பானது என்றால் தெரியாது. அதன் அடிப்படையில் 5.7.2016 ல் மேற்படி தீர்ப்பை ஒப்புக்கொண்டு தருமராஜ் எழுதிக்கொடுத்த தானப் பத்திரத்தை ரத்து

செய்துவிட்டார் என்றால் தெரியாது. தருமராஜ் 2.9.2017ம் தேதி இறந்தார் என்றால் தெரியாது. அவர் இறக்கும் முன்பு இருதய நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் இருந்த விவரம் தெரியாது. அவர் இறப்பதற்கு முன்பு பெங்களூரில் Enhanced Health Care மருத்துவமனையில் சுமார் 1 ஆண்டுக்கும் மேலாக சிகிச்சை பெற்று வந்தார் என்றால் தெரியாது. தருமராஜ் அவருடைய சொத்துக்களை பொறுத்து எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்க இயலாத நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. நல்ல நிலையில் இருந்தார். சொத்துக்களைப் பொறுத்தவரை தருமராஜின் வாரிசுகளான வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு இடையே ஏதாவது ஆவணங்கள் ஏற்படுத்திக்கொண்டார்களா என்றால் இல்லை. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது. வழக்கு சொத்து விவரம் எந்த எந்த ஊரில் எத்தனை அயிட்டமாக உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்குச் சொத்துக்கள் யார் யாரிடம் எந்த தேதியில் கிரையம் பெறப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் கே.ஆரோக்கியத்துக்கு சொந்தமான சொத்துக்களை 28.3.1971ம் தேதி இருமக்களுக்கும் உயில் எழுதி வைத்துள்ளார், மேற்படி உயில் ஊர்ஜிதத்திற்கு வந்தது என ஒப்புக்கொள்கிறேன் என்றால் சரிதான். கே.ஆரோக்கியம் 31.07.1972ல் இறந்தவிட்டார் என குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி உயிலில் மேற்படியாரின் ஆயுள்காலத்திற்கு பின் மேற்படியாரின் இரண்டு ஆண் மக்கள் அடைந்து அனுபவித்து வரவேண்டியது என்றும், அதன் அடிப்படையில் தொடர்ந்து அவரது ஆண் மக்கள் அனுபவித்து வரவேண்டியது என்று குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான். தருமராஜ் ஆயுள்காலம் வரை அனுபவிக்க மட்டுமே உரிமை உள்ளது என்றும், மேற்படி தருமராஜ் தனது ஆயுள் காலத்திலேயே உயில்படி தனக்கு உரிமையில்லாத நிலையில் தனது 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பத்திரங்கள் செல்லாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஆரோக்கியத்துக்கு உரிமையில்லாத நிலையில் அவர் எனக்கு எழுதிக்கொடுத்த கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. சொத்தே உரிமையில்லாத நிலையில் நான் 16.04.2018ம் தேதி பெற்ற கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. தருமராஜ் உயிருடன் இருந்தவரை சொத்துக்கான

பட்டா அவருடைய பெயரில்தான் இருந்தது என்றால் தெரியாது. 1 ம் பிரதிவாதி அவருடைய செல்வாக்கை வைத்து பட்டா பெற்றார் என்றும் அதை வைத்து நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. தருமராஜ் எத்தனை உயில் எழுதிவைத்தார் என்று தெரியாது. தருமராஜ் எழுதி வைத்ததாக சொல்லும் உயில் பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். தருமராஜ் உயிருடன் இருக்கும்வரை எந்த உயிலும் எழுதவில்லை என்றும் நானும் 1 ம் பிரதிவாதியும் சேர்ந்து உற்பத்தி செய்த ஆவணத்தின் அடிப்படையில் நான் எதிர்வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. சொத்துக்கள் கூட்டாகத்தான் அனுபவித்து வந்தார் என்றும் அதனால் வாதி பாகம் கோருகிறார் என்றும், 1 ம் பிரதிவாதி எனக்கு 16.04.2018 ம் எழுதிவைத்த கிரையப்பத்திரம் செல்லாது என வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் 11 வது பத்தியில் வாதி மற்றும் 1 ம் பிரதிவாதியின் தந்தை 2.09.2017 ல் இறந்த பின்னர் மேற்படியாரின் இறுதி உயிலான 20.07.2016 ம் தேதிய உயில் ஊர்ஜிதத்திற்கு வந்தது என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரத்திற்கு முரணாக நான் 1 ம் பிரதிவாதிக்கு வேண்டியவர் என்ற முறையில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

S SIVAKADATCHAM

Digitally signed by S SIVAKADATCHAM
Date: 2023.02.28 16:10:02 +0530

Principal District Judge,
Dindigul.